விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

பக்கங்கள்: நான்கு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 சித்திரை 01 சனிக்கிழமை (14.04.2007) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 116






## மக்களின் இன்னல்கள் நீங்கி உவகை மேலிட புத்தாண்டில் இறைவனைப் பிரார்த்திப்போம்

### ஆசிச் செய்தியில் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

மலரும் சர்வசித்தி வருடத்தில் இன்னல்கள் நீங்கி மக்களின் உள்ளத்தில் உவகை நேரிட இறைவனைப் பிரார்த்திக்குமாறு நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோம சுந்தர தேசிய ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் மற்றும் சர்வதேச இந்து மத குருமார் பீட பீடாதிபதி சிவஸ்ரீ ஜ.மகேஸ்வரக் குருக்கள் ஆகியோர் வெளியிட்டுள்ள ஆசிச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்று சர்வசித்து வருடம் பிறந்திருக்கிறது. இது ஒரு நல்ல நாள். ஈழம் வாழ் மக்கள் எல்லோருமே இன்னல் நீங்கி, உள்ளத்தில் உவகை மேலிட நல்வாழ்வு கிட்டும்என்ற நம்பிக்கைக் கீற்றுடன் (04 ஆம் பக்கம் பார்க்க)

புத்தாண்டு வாழ்த்துக்கள்

மலரும் புதுவருடத்தில் நாட்டில் அமைதி ஏற்பட இறைவனைப் பிரார்த்திப்பதுடன், அன்பர்கள், நண்பர்கள், வாசகர்கள் விளம்பரதாரர்கள் அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வலம்புரிக் குடும்பம்

# தமிழ் மக்களின் கோரிக்கைகளை அரசாங்கம் நிராகரிக்கக் கூடாது

## நல்லூரில் இன்று கோபுர தரிசனம்

(யாழ்ப்பாணம்)

சர்வசித்து புத்தாண்டை ஒட்டி நல்லூர் கந்தசுவாமி கோவிலில் இன்று காலை 10.42 மணிக்கு சண்முக தரிசனம் இடம்பெறும்.

சண்முக தரிசனத்தைத் தொடர்ந்து ஆலய கோபுரங்கள் மற்றும் மணிக்கூட்டுக் கோபுரங்களில் புதிய தங்கக் கலசங்கள் பிரதிஷ்டை செய்து கோபுர தரிசனம் இடம் பெறும். (ந)

## ஜே.வி.பி.வேண்டுகோள்

(கொழும்பு)

தற்போதைய நிலைமையில் அரசாங்கம் எந்த வகையிலும் பேச்சுவார்த்தையில் ஈடுபடக் கூடாது என ஜே.வி.பி. தெரிவித்துள்ளது. அதேநேரம் தமிழ் மக்களின் உரிமைகளை பாதுகாக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர்களின் நியாயமான கோரிக்கைகளை நிராகரிக்கக் கூடாது எனவும் ஜே.வி.பி. வேண்டுகோள் விடுத்துள்ளது. (04 ஆம் பக்கம் பார்க்க)

## ஓமந்தைச் சோதனைச் சாவடி நேற்று மீண்டும் திறக்கப்பட்டது

(கொழும்பு)

தற்காலிகமாக மூடப்பட்டிருந்த ஓமந்தை சோதனைச் சாவடியூடான நுழைவாயில் நேற்று மீண்டும் திறக்கப்பட்டது.

மூன்று நாள்களாக மூடப்பட்டிருந்த ஓமந்தைச் சோதனைச் சாவடி நேற்று பிற்பகல் ஒரு மணிமுதல் 5 மணிவரை திறந்திருந்ததாக தேசிய பாதுகாப்புக்கான தகவல் மத்திய நிலையம் தெரிவித் (04 ஆம் பக்கம் பார்க்க)

## சிறிபதியை தம்வசம் இழுக்க ஐக்கிய தேசியக் கட்சி முயற்சி

(கொழும்பு)

ஜனாதிபதியால் அமைச்சுப் பதவியிலிருந்து விலக்கப்பட்ட சிறிபதி சூரியாராட்சிக்கு எதிராக மறுபடியும் ஜனாதிபதியினால் சுதந்திரக் கட்சியிலிருந்து ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்து கட்சியிலிருந்து விலக பணிக்கப்பட்டுள்ளதாக சுதந்திரக் கட்சியின் செயலர்

கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவரைத் தம் பக்கம் இழுத்து அரசாங்கத்தை கலைக்கத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது. (ச)

### முல்லைத்தீவில் கிபீர் தாக்குதல்

விமானப் படையின் கிபீர் விமானங்கள்

## இராணுவத்தின் தாக்குதல்களுக்கு கிழக்கில் விரைவில் பதில் தாக்குதல்

### தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

அரசாங்கம் போர் முனைகளில் இராணுவ வெற்றிகளைப் பெற்று வருவதாக முன்னெடுக்கும் பிரசாரங்களுக்கான பதில் விரைவில் வழங்கப்படும் என விடுதலைப்

களமுனைகளில் அரசாங்கம் வெற்றியை ஈட்டியுள்ளதாக அரசாங்கம் பிரசாரங்களை மேற்கொண்டு வருகிறது. இதற்கு விடுதலைப்புலிகள் செயற்பாடுகள் மூலம் பதில் வழங்குவார்கள் என அவர் தெரிவித்துள்

ருந்து விலக்கப்பட்ட சிறிபதி சூரியாராட்சிக்கு எதிராக மறுபடியும் ஜனாதிபதியினால் சுதந்திரக் கட்சியிலிருந்து ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்து கட்சியிலிருந்து விலக பணிக்கப்பட்டுள்ளதாக சுதந்திரக் கட்சியின் செயலர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

தற்போது சிறையிலுள்ள அவர் விரைவில் கட்சியிலிருந்து நீக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. இதேவேளை சிறிபதி சூரியாராட்சி கட்சியிலிருந்து விலக்கப்பட்டால் ஐக்கிய தேசியக்கட்சி தமது தேசியப் பட்டியல் மூலம் அவருக்கு நாடாளுமன்ற உறுப்பினர் பதவி வழங்குவதற்குத் தயாராகவிருப்பதாக

கத்தை கலைக்கத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது. (ச)

## முல்லைத்தீவில் கிபீர் தாக்குதல்

விமானப் படையின் கிபீர் விமானங்கள் முல்லைத்தீவு, புதுக்குடியிருப்புப் பகுதிகளிலுள்ள கடற்படையினரின் தலைமையகம் மீது தாக்குதல் நடத்தியதில் அது முற்றாக அழிக்கப்பட்டதாக தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. எரிபொருள் களஞ்சியசாலை ஒன்றையும் இயந்திரங்களையும் தாக்கியழித்ததாகவும் மத்திய நிலையம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (ச–3)

(கிளிநொச்சி)

அரசாங்கம் போர் முனைகளில் இராணுவ வெற்றிகளைப் பெற்று வருவதாக முன்னெடுக்கும் பிரசாரங்களுக்கான பதில் விரைவில் வழங்கப்படும் என விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து நேற்று ஏ.எவ்.பி. செய்திச் சேவைக்கு வழங்கிய நேர்காணலிலேயே தமிழ்ச்செல்வன் இதனைத் தெரிவித்துள்ளார்.

களமுனைகளில் அரசாங்கம் வெற்றியை ஈட்டியுள்ளதாக அரசாங்கம் பிரசாரங்களை மேற்கொண்டு வருகிறது. இதற்கு விடுதலைப்புலிகள் செயற்பாடுகள் மூலம் பதில் வழங்குவார்கள் என அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் மீது இனஒழிப்பு என்ற யுத்தத்தைத் தொடுத்து மனித அவலத்தை உருவாக்கியுள்ள அரசாங்கம் அவற்றை களமுனை யுத்தமாக திசை திருப்பும் பிரசாரங்களாக உருவாக்க *(04 ஆம் பக்கம் பார்க்க)*

# கட்டுநாயக்கா விமான நிலையம் மீது புலிகள் ஆறு குண்டுகளை வீசியுள்ளனர்

## அரச ஆய்வறிக்கையில் தெரிவிப்பு

(கொழும்பு)

கட்டுநாயக்கா விமானத் தளம் மீது விடுதலைப்புலிகளின் வான்படையினர் 6 குண்டுகளை வீசியதாக அரசாங்க ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குற்றப்புலனாய்வுப் பிரிவுக்கு அளிக்கப்பட்டுள்ள அறிக்கையில், 6 குண்டுகள் வீசப்பட்டதாகவும் அவற்றில் 5 வெடித்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் விமானப் படையினரோ முன்னர் 4 குண்டுகளையே வான்புலிகள் வீசியதாகத் தெரிவித்திருந்ததாகக் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

வான் புலிகளின் தாக்குதல் தொடர்பான விமானப்படை மற்றும் குற்றப் புலனாய்வுப் பிரிவினரின் விசாரணை அறிக்கைகள் விரைவில் வெளிவரக் கூடும் என்று கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச–5)

# பாப்பரசரைச் சந்திப்பதற்கு ஜனாதிபதி வத்திக்கான் பயணம்

(கொழும்பு)

வத்திக்கானில் பாப்பரசர் பெனடிக்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சந்தித்துப் பேச உள்ளார். வத்திக்கானுக்கு ஜனாதிபதி அடுத்த வாரம் பயணம் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பாப்பரசர் விடுத்திருந்த ஈஸ்டர் திருநாள் செய்தியில், தமிழீழ விடுதலைப்புலிகளும் அரசாங்கமும் வன்முறைகளை நிறுத்திப் பேச்சுக்களை மீண்டும் தொடங்க வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தார்.

இந் நிலையில் அமைச்சரவையில் இடம் பெற்றுள்ள கத்தோலிக்க அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களை அழைத்துக் கொண்டு பாப்பரசரை மகிந்த ராஜபக்ஷ சந்திக்கவுள்ளார். இக் குழுவில் வெளிவிவகார அமைச்சர் றோகித போகொல்லாகமவும் இடம்பெறக் கூடும் எனத் தெரிவிக்கப்பட்டது.

முன்னதாக பாப்பரசரை சந்திக்க சிறிலங்காவின் ஆர்ச் பிசப் மரியோ ஜெனரி அழைப்பு விடுத்திருந்தார்.

பாப்பரசராக பெனடிக் பொறுப்பேற்ற 2 ஆம் ஆண்டு *(04 ஆம் பக்கம் பார்க்க)*

மிதிவெடி தடை ஒப்பந்தத்தில் கைச்சாத்திட
சம்பந்தப்பட்டவர்களுக்கு அழுத்தம் கொடுப்போம்
unicef

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# புத்தாண்டுச் சிறப்பிதழ்

"சோலைக் குயில் கூவும் ஒலி
காற்றினிலே குலாவும் இருளகலும்
ஒளியினிலே முகமலரும் அதாலே
மேள தாளம் மணி ஒலிக்க
புது வருடம் இதோ பார்
உங்கள் நலம் சௌபாக்கியம்
அதுவேயெம் மன வாஞ்சை"





கொமர்ஷல் வங்கி

உங்கள் நலனே எங்கள் நோக்கம்

(C-அ/653)

**இன்று மங்கலமாய் மலரும் 'சர்வஜித்' புத்தாண்டு அனைவரின் வாழ்விலும் சகல சௌபாக்கியங்களையும் அளிக்க மகிழ்வுடன் வாழ்த்துகின்றோம்**

புதுவருட கொடுக்கல் வாங்கல்கள் இன்று (14.04.2007) சனிக்கிழமை காலை 11.00 மணிமுதல் நண்பகல் 1.00 மணிவரை அனைத்துக் கிளைகளிலும் நடைபெறும்

சீட்டிழுப்பிற்கு முந்திய ஒரு கலண்டர் மாதத்தில்




# பரிசுகள்

சீட்டிழுப்பிற்கு முந்திய ஒரு கலண்டர் மாதத்தில் சேமிப்பு அல்லது சிங்கிதி கணக்கில் 10,000 ரூபாயை அல்லது நடைமுறைக் கணக்கில் 5,000 ரூபாயை குறைந்தபட்ச மீதியாக வைத்திருந்து சீட்டிழுப்பிற்கான தகுதியைப் பெறுங்கள்.

## ப்ரிமியம் சீட்டிழுப்பு

ப்ரிமியம் சீட்டிழுப்பில் பங்குபற்ற வேண்டுமானால் அச் சீட்டிழுப்பிற்கு முந்திய ஒரு கலண்டர் மாதத்தில் சேமிப்பு அல்லது சிங்கிதி கணக்கில் 100,000 ரூபாயை அல்லது நடைமுறைக் கணக்கில் 50,000 ரூபாயை குறைந்தபட்ச மீதியாக வைத்திருக்க வேண்டும்.

## வருட இறுதி மாபெரும் சீட்டிழுப்பில்

ரூ.15மில்லியன் பெறுமதியான ஆடம்பர வீடு அல்லது பணம் ரூ. 9 மில்லியன் பெறுமதியான டொயோட்டா கெம்றி கார்

## வருட இறுதி ப்ரிமியம் சீட்டிழுப்பில்

ரூ.20 மில்லியன் பெறுமதியான நவீன மேர்சிடீஸ் பென்ஸ் கார்

## இரு வாரங்களுக்கு ஒரு தடவை

சுசுக்கி ஸ்விவ்ட் கார் ஒன்றை வெல்லுங்கள்

## மாதாந்த கிளைச் சீட்டிழுப்பில்

தங்க நாணயங்களும் கைக்கடிகாரங்களும்

## டீ.வி.கேம் ஷோவில்

இன்னும் ஏராளம் பரிசுகள்

எனவே அதிகமாகச் சேமித்தால் அதிகமாக வெல்லலாம் ! இன்றே பத்தும் விமன கணக்கொன்றை ஆரம்பியுங்கள். அல்லது நீங்கள் தற்போது வைத்திருக்கும் கணக்கில் வைப்புக்களை அதிகரித்து உங்கள் வெற்றி வாய்ப்புக்களை அதிகரியுங்கள்.

* நிபந்தனைகள் அடங்கலாக

யாழ்ப்பாணம்- சுன்னாகம்- நெல்லியடி
ஸ்ரான்லி வீதி -மானிப்பாய்

இன்றைய நாளில் புதிய கணக்கினை ஆரம்பிப்பவர்களும் வைப்பில் இடுபவர்களும் HNB ன் அன்பளிப்புக்களினை தவறவிடாதீர்கள்.



HNB

(G 54/654)

உள்நாட்டு யுத்தமோ வெளிநாட்டு யுத்தமோ எதுவாய் இருந்தாலும் அதிலிருந்து தப்பவேண்டும். ஒருவரோடு ஒருவர் கொள்ளும் சமாதானமும் நல்லெண்ணமுமே சிறந்தன.

—பிளேட்டோ

வலம்புரி

# தமிழ்-சிங்களப் புத்தாண்டில் சமாதான தீபம் ஒளிரட்டும்

இன்று தமிழ்-சிங்கள புத்தாண்டு. சூரிய பகவான் பன்னிரு ராசிகளை முதலாவதாக இருக்கக் கூடிய மேட ராசியில் சஞ்சரிக்கும் காலத்தை புத்தாண்டாக தமிழ்-சிங்கள மக்கள் அனுஷ்டிக்கின்றனர்.

சூரியனின் ஆரம்பச்சுற்றை வருடமாகக் கணித்து அதனை புத்தாண்டாக கொண்டாடும் மரபு சைவத்தமிழ் மக்களிடம் மட்டுமன்றி சிங்கள மக்களிடமும் நடைமுறையில் இருப்பது இரு இன பண்பாடு ஒற்றுமையின் ஓர் எடுத்துக்காட்டாகும்.

தமிழ் -சிங்கள மக்களிடையேயான மொழி, சமயம், கலாசாரப் பண்பாட்டு விழுமியங்கள் என பலவற்றில் ஒற்றுமைப்பாடு இருப்பதைக் காண முடியும்.

அதன் முக்கியமான ஓர் நிகழ்வாக புத்தாண்டை குறிப்பிடமுடியும். தமிழ் மக்களும் சிங்கள மக்களும் கொண்டாடுகின்ற புத்தாண்டு இரு இனங்களுக்கிடையேயான ஒற்றுமையைப் பலப்படுத்தி இருக்கவேண்டும்.

எனினும் அது நடைமுறையில் சாத்தியப்படாமல் போனமை துரதிஷ்டமாகும். இரு இனங்களுக்கும் பொதுவானதும் முக்கியமானதுமான ஓர் கலாசார நிகழ்வாக புத்தாண்டு இருந்த போதிலும் இரு இன ஒற்றுமை பலப்படாமைக்கான காரணம் என்ன? என்ற ஆய்வில் அரசியல் லாபம் தேடும் அரசியல்வாதிகளும், பௌத்த மதவாதம் கொண்ட பிக்குகளுமே காரணம் என்பதை கண்டறிய முடியும்.

தமிழ்-சிங்கள மக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கு பதிலாக வேற்றுமையை வளர்க்கும் தந்திரமே பிரயோகிக்கப்பட்டது.

இதனால் இரு இன மக்களும் தமக்கிடையே வேற்றுமை இயல்புகளை தேடித்தேடி வளர்க்கலாயினர்.

ஆள்வதும் ஆளப்படுவதும் என்ற இரு நிலைப் பிரிப்பு இன யுத்த வியாபகம் பெறச் செய்தது. இதனால் இலங்கை மண் சொலணாத் துயரத்திலும் அழிவு மேட்டிலும் மூழ்கிப்போயுள்ளது.

இதிலிருந்து விடுபடவேண்டுமாயினும் இலங்கையில் வாழும் அனைத்து இன மக்களும் சம உரிமையுடையவர்களாக-ஆட்சி அதிகாரத்தில்

# யாழில் இருந்து சீமெந்தை இறக்க தென்னிந்தியா விருப்பம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டிலிருந்து சீமெந்தை இறக்குமதி செய்வதில் தென்னிந்தியா பெரிதும் விரும்புவதாக சுவிஸ் சீமெந்து கூட்டுஸ்தாபனத்தின் இலங்கைக்கான தலைவர் மணிலால் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

இலங்கையில் விரைவில் சமாதானம் ஏற்படுகின்ற கட்டத்தில் காங்கேசன்துறைச் சீமெந்து தொழிற்சாலையில் இருந்து பாக்குநீரிணையூடாக தென்னிந்தியாவுக்கு சீமெந்து விநியோகிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார். காங்கேசன்துறையில் இருந்து சென்னைக்கு 23 மைல் தூரமே உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-3)

# செய்மதியைப் பயன்படுத்தவில்லை குற்றச்சாட்டுக்கு புலிகள் மறுப்பு

இன்டெல்சாட் நிறுவனத்தின் செய்மதியை தமிழீழ விடுதலைப்புலிகள் பயன்படுத்திய குற்றச்சாட்டை அதன் இராணுவப் பேச்சாளர் இராசையா இளந்திரையன் மறுத்துள்ளதாக ஏ.எவ்.பி.செய்தி சேவை தகவல் வெளியிட்டுள்ளது. இது குறித்து கருத்து தெரிவித்த இராணுவப் பேச்சாளர் இளந்திரையன் தாங்கள் சட்டப்படியே செய்மதியைப் பயன்படுத்துவதாகவும் அதில் சட்டவிரோதமான செயற்பாடுகள் எதுவும் இல்லையெனவும் செய்தி சேவைக்கு கூறியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் வானொலி மற்றும் தொலைக்காட்சி ஆகியவற்றை சர்வதேச ரீதியில் ஒலி,ஒளிபரப்புச் செய்ய தமது செய்மதியை சட்டவிரோதமாக பயன்படுத்தியதாக இன்டெல்சாட் நிறுவனம் குற்றஞ்சுமத்தியுள்ளது.

இன்டெல் சார் நிறுவனத்தின் செயற்கைக்கோள் ஒன்றின் வெற்றிடமாக உள்ள இடத்தைப் பயன்படுத்தி இந்தக்குழுவினர் இந்த ஒலிபரப்பைச் செய்து வருகிறார்கள். இவ்வாறு செய்வதற்கு எங்களுடைய அனுமதி எதுவும் கிடையாது.அவர்கள் அப்படிச் செய்வதை-எங்களுடைய சேவைகளை பயன்படுத்திக்கொள்வதை நாங்கள் ஒரு திருட்டுச்செயலாகத்தான் கருதுகிறோம் என இன்டெல்சாட் நிறுவனம் தெரிவித்துள்ளது.(ச-3)

# மலரும் சித்திரைப் புத்தாண்டு சமாதானத்தை தோற்றுவிக்கட்டும்

## அமைச்சர் டக்ளஸ் வாழ்த்துச்செய்தி

(கொழும்பு)

இன்று பிறந்துள்ள சர்வசித்து புத்தாண்டு தினமானது இலங்கையில் வாழும் அனைத்து இன மக்களிடையேயும் ஐக்கியத்தையும் சமாதானத்தையும் உருவாக்கும் நம்பிக்கைகளைத் தோற்றுவிக்க வேண்டும் என வாழ்துகின்றேன். இவ்வாறு ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சியின் செயலாளர் நாயகம், சமூக சேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா விடுத்துள்ள சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் வாழும் சிங்கள மக்களும் தமிழ் மக்களும் இணைந்து இப் புத்தாண்டு தினத்தை கொண்டாடுவதானது இனவுறவுகளை மென்மேலும் கட்டியெழுப்புவதற்கும் சகோதரத்துவத்தினை அர்த்தமுள்ளதாக்குவதற்கும் இதேவேளை புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்கான தீர்வினை விரைவாக எட்டுவதற்குரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவரும் இத் தருணத்தில் இந்தப் புத்தாண்டு எல்லோரது மனங்களிலும் சமாதானத்தையும் ஐக்கியத்தையும் உருவாக்க வழிவகுக்க வேண்டும் என வாழ்த்துகின்றேன் எனவும் தெரிவித்துள்ளார். (ச)

# வருடப்பிறப்பு வழிபாடு

(யாழ்ப்பாணம்)

சர்வசித்து வருடப்பிறப்பு தினமான இன்று கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் முற்பகல் 9.30 மணிக்கு ஸ்நபன அபிஷேகமும் 10.30 மணிக்கு விசேட பூஜையும் இடம் பெற்று அம்பாள் வீதியுலா வலம் வருவார். (ச-3)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான சர்வசித்து வருடப் பிறப்புவிழா இன்று நடைபெறவுள்ளது. காலை 6 மணிக்கு ஸ்நபன அபிஷேகத்துடன் ஆரம்பமாகும் பூஜைவழிபாடு மாலை 5 மணிக்கு அர்த்த சாமப்பூஜையுடன் நிறைவு பெறும். (ச)

# ஆயுததாரிகளினால் குடும்பஸ்தர் சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

பண்டத்தரிப்பு சாந்தை என்ற இடத்தில் நேற்று முன்தினமிரவு 6.40 மணியளவில் ஆயுததாரிகளினால் குடும்பஸ்தர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

இச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த தவராசா கிருஷ்ண மூர்த்தி (வயது 28) என்பவரே கொல்லப்பட்டவராவார்.

சம்பவத்தில் குடும்பஸ்தர் மனைவிக்கு குழந்தை பிரசவத்திற்காக அறுவைச் சிகிச்சை செய்வதற்கு மேலதிக இரத்தம் தேவையென நண்பரொருவரை வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லும் போதே சுட்டுக்கொல் லப்பட்டார் என விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் கூடச்சென்ற நண் பரும் காயமடைந்ததாக தெரிவிக்கப்பட்டது. சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட மல்லாகம் நீதிவான் திருமதி சரோஜினி இளங்கோவன் பிரேதபரிசோதனைக்காக சடலத்தை யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு இளவாலைப் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ச-5)

# பிறக்கும் சித்திரைப் புத்தாண்டில் அனைவருக்கும் மகிழ்ச்சி உண்டாகட்டும்

## இராணுவ.யாழ்.இராணுவத்தளபதியின் வாழ்த்துச் செயதி

(யாழ்ப்பாணம்)

பிறக்கும் புதுவருடம் சமாதானம், சௌபாக்கியம் நிறைந்து ஒன்றாகட்டும் என இராணு வத்தளபதி லெப்டினன் ஜெனரல் சரத்பொன்சேகா தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள புத்தாண்டுச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, நாம் அனைவருக்கும் உயிர் வாழ்வதற்கு ஒருதேசம் இருக்க வேண்டும். அங்கு சமாதானத்துடனும் ஒற்றுமையுடனும் வாழ்வதற்கான உரிமை நம் எல்லோருக்கும் இருக்க வேண்டும். அனைவரும் இலங்கைத் தாயின் மைந்தர்கள் ஆவோம். இராணுவப் படையினர் என்ற முறையில் நாம் தினமும் உங்களை துன்பங்களில் இருந்து மீட்டெடுப்பதற்கும் நல்ல வாழ்க்கை

கையில் வாழும் அனைத்து இன மக்களும் சம உரிமையுடையவர்களாக-ஆட்சி அதிகாரத்தில் பங்கேற்கும் சமத்துவம் கொண்டவர்களாக வாழும் முறைமை நடைமுறையில் உருவாக்கப் படவேண்டும்.

அத்தகைய உயரிய நோக்கு நிறைவேறுவதற்கு இன்று மலரும் புத்தாண்டு உதவட்டும். கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக யுத்தம் புரிவதில் செலவிட்ட காலத்திற்காக மலருகின்ற ஆண்டில் பிராயச்சித்தம் செய்வோம்.

அந்த பிராயச்சித்தம் புலருகின்ற புத்தாண்டு சமாதானத்திற்கான தீபத்தை ஒவ்வொருவரும் அவரவர் உள்ளங்களில் ஏற்றிக்கொள்வதாக இருக்கவேண்டும்.

இப்போது கூட சமாதானத்தின் கதவுகள் திறந்தே இருக்கின்றன. சமாதானப் பேச்சை ஆரம்பிப்பதன் ஊடாக விட்டுக்கொடுப்புகளின் மத்தியில் அரசும் விடுதலைப்புலிகளும் சமாதான இலக்கை அடைய முடியும்.

இதற்கான உழைப்பு கடினமாக இருக்க வேண்டும். அதே நேரம் இதுவரை இன வாதம் பேசி மக்களிடையே ஒற்றுமையீனத்தை ஏற்படுத்திய பேரினவாத சிந்தனையாளர்கள் புலரும் புத்தாண்டில் தமது அழுக்காற்றை ஒதுக்கிவைத்து விட்டு சமாதானத்திற்காக பாடுபடவேண்டும்.

இலங்கை மண்ணில் சகல மக்களும் ஒற்றுமையாக வாழ்வதற்கான ஏற்பாடுகளை முன்னெடுக்க தென்னிலங்கை அரசு முன்வரவேண்டும்.

நாம் அனைவருக்கும் உயிர் வாழ்வதற்கு ஒருதேசம் இருக்க வேண்டும். அங்கு சமாதானத்துடனும் ஒற்றுமையுடனும் வாழ்வதற்கான உரிமை நம் எல்லோருக்கும் இருக்க வேண்டும். அனைவரும் இலங்கைத் தாயின் மைந்தர்கள் ஆவோம். இராணுவப் படையினர் என்ற முறையில் நாம் தினமும் உங்களை துன்பங்களில் இருந்து மீட்டெடுப்பதற்கும் நல்ல வாழ்க்கை நடத்துவதற்கும் தேவையான சூழலை அமைப்பதற்கும் எம்மை அர்ப்பணித்துள்ளோம்.

வைத்திய வசதியின்றி நோய்வாய்ப்பட்டு, பட்டினியில் வாடியும் பிள்ளைகளுக்கு கல்வி இல் லாமலும் நீங்கள் துன்பப்பட்டது இரகசியம் அல்ல. இவ்வாறான கஷ்டங்கள் மத்தியில் வாழ்க் கை நடத்திய உங்களுக்கு இன்று மகிழ்ச்சியுடனும் சமாதானத்துடனும் வாழ்க்கை நடத்துவதற் கான சூழலை உருவாக்கி பாதுகாப்பு படையினர் மிகவும் அளப்பரிய சேவையை ஆற்றுகின் றனர்.

பாதுகாப்பு படையினரால் உங்களுக்கு பூரணமான பாதுகாப்பு வழங்கப்படுவது மட்டு மல்லாமல் உங்களுக்கு அவர்களினால் எந்தவொரு இடையூறுகளும் ஏற்படாமல் இருப்ப தற்கும் நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம். இப்போது விடுதலைப்புலிகளின் கீழ் இருந்து பெருந்தொகையான பிரதேசத்தை நாம் கைப்பற்றியுள்ளோம். அப் பிரதேச மக்களுக்கு தேவை யான உணவு , தண்ணீர், மருந்து, கல்வி, பிரயாண வசதிகள் போன்ற அடிப்படை கட்டாய தேவைகள் ஜனாதிபதியின் மகிந்த சிந்தனையின் கீழ் மிக விரைவில் வழங்குவதற்கும் மேம்பாட்டுக்கும் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

பண்டைக்காலம் தொட்டு சகல இன இலங்கை வாழ் மக்களால் கொண்டாடப்பட்ட சிங்கள-இந்து புத்தாண்டு திருநாள் இம் முறையும் கொண்டாடப்படுவதற்கான சந்தர்ப்பம் பெருந் தொகையினருக்கு கிடைத்துள்ளது. இம் முறை புதுவருடம் சமாதானம் சௌபாக்கியம் நிறைந்த ஒன்றாகட்டும் என்று ஒரே மனதுடன் வாழ்த்துகின்றோம். அனைத்து இனங்களோடு கை கோர்த்து சகோதரத்துவத்துடன் வாழ்வதற்கு உரிய நிலைமை மலர்வதற்கும் இலங்கை தாயின் மைந்தர்களாகிய உங்கள் அனைவருக்கும் நல்லதொரு வருங்காலத்தை பிரார்த்திப்பேன்.

இதேவேளை தமிழ்-சிங்களப் புத்தாண்டு மக்கள் அனைவரும் மகிழ்ச்சிகரமானதாக அமைய வேண்டு மென யாழ்.இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சந்திரசிறி வெளியிட்டுள்ள புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவரின் புத்தாண்டுச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

கடந்த காலத்தில் யாழ்.பிரதேசத்தில் யுத்தம் காரணமாக யாழ்.பிரதேசத்திற்குள் அத் தியாவ சியப் பொருள்களையும் சேவைகளையும் வழங்குவது மிகவும் கடினமான காரி யமாக அமைந் தமையானது யாவரும் அறிந்த உண்மையாகும். என்றாலும் அத்தருணத்தில் பின் நிற்காது மிகவும் பெருமையுடன் தமது பொறுப்பையும் சேவையையும் குறைவின்றி வழங்கிய அரசாங்க அலுவலர்கள்; அத்தியாவசிய சேவை அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் அனைவருக்கும் எனது கௌரவத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதே போன்று யாழ்.பிரதேசத்திற்கு அரச சேவைகளையும் அத்தியாவசிய சேவைகளையும் வழங்கும் உங்கள் அனைவருக்கும் எனது பாராட்டைத் தெரிவிக்க இச் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்கின்றேன். இன்றைய நாளில் மக்கள் தமிழ்-சிங்கள புத்தாண்டைக் கொண்டாடும் இத் தருணத்தில் அம்மக்கள் மகிழும் விதத்தில் வைபவத்தைக் கொண்டாடுவதற்குரிய அத்தியாவசியப் பொருள்களை விநியோகிப்பதிலும் அத்தியா வசிய சேவைகளை வழங்கு வதிலும் பாதுகாப்புப்படையினருடன் இணைந்து மேற்கொண்ட தியாகத்தின் பலனாக எம்மக் கள் மகிழ்ச்சியான தமிழ்-சிங்கள புத்தாண்டை கொண்டாட வழியமைத்தது என்று மன மகிழ்ச்சி யுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இன பேதமின்றி ஒன்றிணைந்து இன்று நாம் கொண்டாடும் கலாசார பிணைப்பை போன்று எதிர்காலத்திலும் உலகில் பிரிக்க முடியாத இனங்களாக இணைவதற்கு வேண் டுமென்று நான் பிரார்த்திக்கின்றேன். அதே போன்று உதித்த தமிழ் சிங்கள புத்தாண்டு உங்கள் அனைவருக் கும் உங்கள் குடும்பத்தார் அனைவருக்கும் மகிழ்ச்சிகரமான புத்தாண்டாக அமைய வேண்டு மென்று ஒரு மனதுடன் வாழ்த்துகின்றேன்.

(ச)

# நியூசிலாந்தை இலங்கை அணி வென்றது

(ஜமெய்கா)

நியூசிலாந்தை ஆறு விக்கெட்டுக்களால் இலங்கை அணி அபார வெற்றி பெற்றது. நியூசிலாந்து அணி இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடியது.

நியூசிலாந்து அணி 50 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களையிழந்து 219 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஸ்கொட்ஸ்ரைனிஸ் 111 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்து வீச்சில் இலங்கை அணி சார்பாக சமிந்தவாஸ், முரளிதரன் தலா 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினர். பதிலுக்கு 50 ஓவர்களில் 220 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 45.1 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 222 ஓட்டங்களைப் பெற்று ஆறு விக்கெட்டுக்களால்வெற்றி பெற்றது.

இதில் ஜெயசூரியா 64 ஓட்டங்களையும் சங்கக்கார ஆட்டமிழக்காமல் 69 ஓட்டங்களையும் பெற்றனர். (ச-5)

## 13 ஈழ அகதிகள் தமிழகம் சென்றனர்

(சென்னை)

நெடுந்தீவிலிருந்து படகு மூலம் நேற்று முன்தினம் 13 பேர் இராமேஸ்வரம் சென்றடைந்துள்ளார்கள்.

தமிழகம் சென்ற இவர்களை பொலிஸார் விசாரணைக்குட்படுத்திய பின் மண்டபம் அகதி முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ச)

## வவுனியாவில் சுட்டுக் கொலை

(வவுனியா)

வவுனியா தோணிக்கல் பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். இச் சம்பவம் நேற்று பிற்பகல் 1.45 மணியளவில் இடம்பெற்றுள்ளது. உயிரிழந்தவர் ரவிச்சந்திரன் பாலேந்திரன்(வயது-39) என அடையாளம் காணப்பட்டுள்ளார். (ச-3)

## சுன்னாகத்தில் இளைஞன் கைது

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் பகுதியில் நேற்று சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டதாக தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

கைதுசெய்யப்பட்ட நபரிடமிருந்து கிளைமோர்க்குண்டு மற்றும் சயனைட் குப்பி ஒன்றும் 16 ஆயிரம் ரூபா பணமும் மீட்கப்பட்டதாக ஊடக மத்திய நிலையம் மேலும் கூறியுள்ளது. (ச-3)

## பாப்பரசரைச்...

நிகழ்வுகள் வத்திக்கானில் எதிர்வரும் 19 ஆம் திகதி நடைபெற உள்ளன. அந் நிகழ்விலும் ஜனாதிபதி தலைமையிலான குழுவினர் கலந்து கொள்ளவுள்ளனர்.

அரசியல் தலைமைக்கும் கத்தோலிக்க திருச்சபை தலைவருக்கும் இடையே நடைபெறவுள்ள முதலாவது சந்திப்பு இது என்பது குறிப்பிடத்தக்கது. (ச-5)

## ஓமந்தைச்...

துள்ளது.

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு இவ் வீதியைத் திறப்பதற்கு தீர்மானிக்கப்பட்டதாக ஊடக மத்திய நிலையம் குறிப்பிட்டுள்ளது.

நான்கு தினங்களுக்கு முன்னர் ஓமந்தைப் பகுதியிலுள்ள இராணுவக் காவலரண் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தியதை யடுத்து சோதனைச் சாவடி மூடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-3)

## வலம்புரியுடன் தொடர்பு கொள்ளவும்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மற்றும் தர்க்காநகர் தேசிய கல்வியியற் கல்லூரிக்குத் தெரிவு செய்யப் பட்டு அனுமதிக் கடிதம் கிடைக்காத மாணவர்கள் வலம்புரியூடாக நேரில் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றார்கள். (ச)

## தமிழ் மக்களின் கோரிக்கைகளை...

தற்போதைய நிலையில் விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடக் கூடாது என்று ஜே.வி.பியின் குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

அதேவேளை அரசாங்கம் தமிழ்மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளை நிராகரிக்கக் கூடாது என்றும் அவர் கூறினார்.

போர் நிறுத்த உடன்படிக்கையின்படி அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கத் தயாராகவிருப்பதாக விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளமை குறித்துக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இவ்விடயம் குறித்து அவர் மேலும் கூறியதாவது,

போர்நிறுத்த உடன்படிக்கையின்படி சமாதானப் பேச்சுவார்த்தையில் ஈடுபடத் தாம் தயாராகவிருப்பதாக விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளதாகத் தெரிகின்றது. புலிகள் வழமை போல் இம்முறையும் மிகவும் தந்திரமான முறையில் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளனர்.

இதனை நாம் மிகவும் அவதானத்துடன் புரிந்து கொள்ள வேண்டும். விடுதலைப்புலிகள் தற்போது பலவீனமடைந்துள்ளனர். எனவே பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டிய அவசியம் புலிகளுக்கு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் புலிகளின் தந்திரோபாயத்தைப் புரிந்து கொண்டு அரசாங்கம் சமாதானப் பேச்சுவார்த்தையில் ஈடுபடக் கூடாது. தற்போதைய நிலைமையில் புலிகளைத் தோற்கடிக்க முடியும் என்று பாதுகாப்புப் படைகள் நிரூபித்துள்ளன. எனவே புலிகளை தோற்கடிப்பதற்கான சந்தர்ப்பத்தைப் பாதுகாப்புப் படைகளுக்கு வழங்க வேண்டும்.

அரசாங்கம் புலிகளை அரசியல் மற்றும் யுத்தரீதியாகத் தோற்கடிக்கும்செயற்பாட்டை முன்கொண்டு செல்ல வேண்டும். அதற்கான ஆதரவினை நாங்கள் வெளியிலிருந்து கொண்டு வழங்குவோம்.

அத்துடன் அரசாங்கம் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்களின் நியாயமான பிரச்சினைகளுக்கு அரசாங்கம் செவிசாய்க்க வேண்டும் என்றார். (ச)


இவ்வருட புதுவருட கொடுக்கல் வாங்கலுக்கு

மக்கள் வங்கியின் உற்சாகமான உபசரிப்பு!

விசேட சேமிப்புப் பத்திரத்தினை பரிசாக பெறுங்கள்!




நீங்கள் சேமிக்கும் ரூ.25,000 பெறுமதியான புதுவருடக் கொடுக்கல் – வாங்கல் சேமிப்பு சான்றிதழுக்கு ரூ.500 பெறுமதியான சேமிப்பு பத்திரம்

புதுவருட சுபநேர கொடுக்கல் வாங்கல்களுக்காக ஏப்ரல் 14 ஆம் திகதி காலை 11.00 மணி முதல்

நீங்களும் சுப நேரத்தில் கொடுக்கல் வாங்கல் செய்ய மக்கள் வங்கிக்கு வாருங்கள்

மக்கள் வங்கி



எப்பணி நற்பணி அப்பணி நம்பணி இப்பணி சொந்தமண்பணி

வல்வெட்டித்துறை மக்கள்


## மக்களின் இன்னல்களை...

முகம் மலர வரும் உதய சூரியனை வரவேற்று மகிழ்ந்திருக்கின்றனர். கின்றோம்.

நாட்டில் சமாதானம் ஏற்பட்டு

முகம் மலர வரும் உதய சூரியனை வரவேற்று மகிழ்ந்திருக்கின்றனர்.

பழையன கழிதலும் புதியன புகுதலும் என்ற ரீதியில் துன்ப துயரம் நீங்கி இனிய இன்ப வாழ்வுக்கு அடிகோலும் விதத்தில் இறைசிந்தனையுடன் வணங்கி, வந்தித்து, சிந்தித்து, வழிபாடியற்றிடும் நல்லிதயங்களுக்கு நல்லது கிட்ட வேண்டும் என்றும் சர்வசித்துகளும் கிடைக்க வேண்டும் என்றும் உளமாரப் பிரார்த்தித்து அருளாசி வழங்குவதில் பெரும் மகிழ்ச்சி உறுகின்றோம்.

சைவத்தின் மேன்மையை மனத்தில் கொண்டு ஆதியும் அந்தமும் இல்லா அருட் பெருஞ்சோதியான ஆண்டவனின் பேரானந்த பெருவாழ்வாகிய மகிழ்ச்சிப் பிரவாகத்தில் மூழ்கித் திளைக்க அனைத்து மக்களுக்கும் வாய்ப்புக் கிட்ட வேண்டுமென்று நல்லைக்குருமணியின் பாதம் துதித்து ஆசி நல்கின்றோம்.

நாட்டில் சமாதானம் ஏற்பட்டு அனைவ ரது வாழ்விலும் வசந்தம் ஏற்பட இறையருளை வேண்டுவோமாக என நல்லை ஆதீன குரு முதல்வர் மற்றும் சர்வதேச இந்து மத குருமார் பீட பீடாதிபதி ஆகியோரின் ஆசிச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## இராணுவத்...

முற்படுவதாகவும் தமிழ்ச்செல்வன் சுட்டிக் காட்டியுள்ளார்.

தேவைகளுக்கு ஏற்றவாறு எமது இயக்கம் இராணுவ யுத்திகளை மாற்றி வருகின்ற போது அது தென்தமிழீழத்திலிருந்து விடுதலைப்புலிகளைப் பின்வாங்கச் செய்தது என அர்த்தப்படாது எனவும் அவர் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் பிரசாரங்களை முறியடிக்கும் வகையில் தென் தமிழீழத்தில்விடுதலைப் புலிகளின் வெற்றிகள் விரைவில் அரங்கேறும் என தமிழ்ச்செல்வன் மேலும் தெரிவித்துள்ளார். (எ-5)


வல்வெட்டித்துறை மக்கள்

மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்திச் சபையின் அனுசரணையுடன் நடாத்தும்
வல்வையில் 2006, 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த

மாணவ மணிகளைக் கௌரவிக்கும் மகோன்னத விழா
23 ஆவது இலவச கண்ணாடி வழங்கும் வசந்த விழா

இடம் : வைத்தியசாலை வளாகம், காலநேரம்: 15.04.2007 ஞாயிறு காலை 9.00 மணி

விழாவினைத் தலைமை தாங்கும் இணைத்தலைமை இளசுகள்

சிம்மக் குரலோன் திரு.எம்.கே.சிவாஜிலிங்கம் (கௌரவ பா.ம.உறுப்பினர் யாழ்.மாவட்டம்)

பிஞ்சுக் குரலோன் Dr. க.மயில்லேறும்பெருமாள் (தலைவர் – வை.அபிவிருத்திச் சபை)

விழாவினை ஆசீர்வதிக்கும் சைவ சித்தாந்த மேதைகள்

சிவஸ்ரீ சோ.தண்டபாணிகதேசிகர் (J.P) பிரதமகுரு வல்வை முத்துமாரி

சிவஸ்ரீ ப.மனோகரக்குருக்கள் பிரதமகுரு வல்வை சிவன்

- மாணவர்களைக் கௌரவிக்கும் பெருமகன்- வாழ்நாள் பேராசிரியர் திரு.பொன்.பாலசுந்தரம்பிள்ளை முன்னைநாள் உபவேந்தர் யாழ்.பல்கலைக்கழகம்
- 4 லட்சம் ரூபா செலவில் (Auto-Urine Analyser + 2Fridges + Urine Strips 2000) அன்பளிப்புச் செய்த I.O.M. நிறுவனத்தின் Operations Officer (செயற்பாட்டு அதிகாரி) Giovanni Cassani( இத்தாலி தந்த செவ்விளநீர் அவர்களால்அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படும்.
- சுனாமி தந்த பனாமாப் பூப்பந்தல்-திறந்து வைக்கும் அறிவுடையோன் சரித்திரப்புருஷ அவதாரம் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம். (சிரேஷ்ட பேராசிரியர் வரலாற்றுத்துறை , யாழ்/பல்கலைக்கழகம்

க.பொ.த.(உ.த.)2006 3A எய்திய உயர் மாணவர்களை கௌரவிக்கும் உயர்ந்த விழா.

1 செல்வி சற்குணபாலன் கிருத்திகா (மா.நி.-2) 2. செல்வி குணபாலசிங்கம் அம்பிகாவதி (மா.நி.-117)

கௌரவிக்கும் குலமகன் கல்வியின் வடதுருவம் திரு. வி.செல்வராசா (கல்விப் பணிப்பாளர்)-வடமராட்சி

- வல்வை பெற்றெடுத்த இருவர் இருவேறு வங்கிகளில் பதவியுயர்வு பெற்று பெற்ற மண்ணுக்கு பெருமை சேர்த்த

ஆதிகோவிலடி தந்த வங்கியின் சிங்கம் திரு. ந.சிவரத்தினம் (செயற்பாட்டு முகாமையாளர் , இலங்கை வங்கி யாழ்ப்பாணம்)

புதுவளவு தந்த பதுமை நங்கி திருமதி சி.சரஸ்வதி (உதவிப் பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி யாழ்ப்பாணம்)

கௌரவிக்கும் பிதாமகன் கருத்துக் களஞ்சிய விகட மேதை திரு.மு.திருநாவுக்கரசு (இளைப்பாறிய நீதிபதி , யாழ்ப்பாணம்)

- சுனாமியால் பாதிக்கப்பட்ட கரையோர மக்களில் தெரிவு செய்யப்பட்ட 200 பேருக்கு இலவச கண்ணாடிகள் வழங்கும் மாபெரும் விழா கௌரவிக்கும் நிறைமகன் பரிசுத்த ஆவியின் மறுபிறவி Dr.சி.கதிரவேற்பிள்ளை (மாவட்ட வைத்திய அதிகாரி பருத்தித்துறை)

விழாவினைச் சிறப்பித்து அன்புச் சொற்போர் ஆற்றும் சிந்தனைச் சிற்பிகள்

சொற்சிலம்பு வரதர் - திரு.ஆர்.வரதீஸ்வரன் (பிரதேச செயலர் .பருத்தித்துறை

நெறிதவறா நெஞ்சுடையோன் - திரு.எஸ். சத்தியசீலன் (பிரதேச செயலர் ,கரவெட்டி)

(815)



**விற்பனைக்கு**

சிங்கர் பிறிச் RNF 250

(நியூமொடல் புதியது)

விற்பனைக்கு உண்டு

தொடர்பு:- அம்பாள் மில்

மல்லாகம் சந்தி, சங்கானை.

தொ.பே.0776668918

(821)



நாளை ஆரம்பம்

A/L -2009

(கலை, வர்த்தகப் பிரிவுகள்)

DMI JAFFNA

(c-006)



இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ.ஸ்தாபனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.04.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.